# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 07.06.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







## மட்டக்களப்பில் ஒரேநாளில் கொவிட்டுக்கு ஆறு பேர் பலி!

### 36வயதுடைய கர்ப்பிணித் தாயும் உள்ளடக்கம்!!



**(வேதாந்தி , ந.குகதர்சன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணிநேரத்திற்குள் கொவிட் தொற்றினால் ஒரு கர்ப்பிணித்தாய் உட்பட 06 பேர் மரணமடைந்துள்ளதாக பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

2 ஆம் பக்கம் பார்க்க >>>

## கிழக்கிற்கு 75 ஆயிரம் கொவிட் தடுப்பூசிகள்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கைக்குக்கிடைத்த நான்கு லட்சம் சைனோபார்ம் தடுப்பூசிகளில் கிழக்கு மாகாணத்திற்கு 75ஆயிரம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன.

தேசிய தடுப்பூசி வழங்கும் திட்டத்தின்கீழ் கொரோனாப் பாதிப்பினடிப்படையில் நாட்டிலுள்ள ஏழு மாகாணங்களுக்கு இந்த 4லட்சம் தடுப்பூசிகள் வழங்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல



2 ஆம் பக்கம் பார்க்க >>>

## உலகக் கிண்ண போட்டியில் விளையாட கிண்ணியா றிப்கான் தெரிவு

**(எப்.முபாரக்)**

2022 - FIFA உலகக் கிண்ண போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் ஆசிய நாடுகளுக்கிடையிலான தகுதிகான் போட்டிக்களில் இலங்கை நாட்டின் சார்பாக விளையாடுவதற்காக

கிண்ணியா அல்- அக்ஸா கல்லூரி பழைய மாணவர் அக்ஸேரியன் விளையாட்டு வீரருமான ஜே.எம். றிப்கான் முகம்மட் கொரியா




2 ஆம் பக்கம் பார்க்க >>>

## தொகுதி விகிதாசார தேர்தலினால் முஸ்லிம்களுக்கும், மலையக தோட்டத் தொழிலாளர் தமிழ் மக்களுக்கும் பாதிப்பு

### கோவிந்தன் கருணாகரம் பா.உ

**(துறையூர் சஞ்சயன்)**

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கும்போது

பொலிஸ், காணி அதிகாரங்களுக்கு மேலாக நிதி அதிகாரமும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தமிழர்கள் இருக்கும் நிலையில் தமிழர்களுக்காக மாகாண சபையைப் பாதுகாக்க அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். தமிழர்களுக்கு தனிநாடு பெறுவதற்காக கடந்த காலங்களில் போராடியதைப் போன்று போராட்டம் செய்யும் நிலை தற்போது இந்த நாட்டிலே இல்லாததனால் மாகாண சபை முறைமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.

இந்தியாவில் பல மாநிலங்கள் இருக்கிறது. ஒரு வெளிநாடு, ஒரு மாநிலத்தில் தங்களது முதலீடுகளை மத்தியரசாங்கத்தின் அனுமதியில்லாமலே மாநில அரசின் அனுமதியுடன் முதலீடுகளைச் செய்யலாம், அதே போல் இலங்கையிலும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கும்போது வடக்கு கிழக்கிலே வெளிநாட்டு முதலீடுகளை நாங்கள் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தும்போது வடக்கு கிழக்கு மாகாணங்களும் அபிவிருத்தி

2 ஆம் பக்கம் பார்க்க >>>






## மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு முதற்தடவையாக 5 பில்லியன் நிதி ஒதுக்கீடு

### சந்திரகாந்தனுக்கு அரசு வாக்குறுதி!

**(சரா.ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு முதற்தடவையாக 5 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்வதாக பேச்சளவில் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

2 ஆம் பக்கம் பார்க்க >>>









## மட்டு.வில் 79,580 குடும்பங்களுக்கு 39 கோடி 79 இலட்சம் நிவாரணம்

நாடு பூராகவும் கொவிட் சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசினால் 5000/= நிதி கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களுக்குள் மாத்திரம் பாதிப்புக்குள்ளான 79,580 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபாவிதம் 39கோடியே 79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதாக கொடுப்பனவு வழங்கிவைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.









## திருமலையில் ஒரே நாளில் 07 மரணங்கள்

**(அப்துல்சலாம் யாசீம், கதிரவன்)**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24

2 ஆம் பக்கம் பார்க்க >>>

## மட்டக்களப்பில்....

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மாவட்டத்தில் இதுவரை கொவிட் தொற்றினால் 40 மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் கர்ப்பிணித்தாய். மரணமடைந்தது இதுவே முதல் தடவையாகும். கர்ப்பிணித்தாய்கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வாழைச்சேனை ஆர்.டி.ஓ வீதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் எனவும் இவருடன் ஏழுமாதசிசுவும் உயிரிழந்துள்ளது.

மரணமடைந்த கர்ப்பினி பெண் கடந்த வெள்ளிக்கிழமை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இன்று திங்கட்கிழமை பிரசவ அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட இருந்தபோதே நேற்று ஞாயிற்றுக்கிழமை கர்ப்பினி பெண் வயிற்றில் சிசுவுடன் மரணமடைந்துள்ளார்

இதே வேளை பிறைந்துரைச்சேனை அறபா வீதியை சேர்ந்த 51 வயதுடைய. சிறுநீரக நோயாளி சனிக்கிழமை இரவு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில் நேற்று காலை 11 மணியளவில் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் குறிப்பிட்ட மரணங்கள் ஆரையம்பதி, மட்டக்களப்பு பயனியர்வீதி, ஏறாவூர், கோறளைப்பற்று பிரதேசங்களில் பதிவாகியுள்ளது. மரணமடைந்தவர்களில் ஒருவர் இருதயநோயாளி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று மட்டக்களப்பு கொக்குவில் கிராமத்தில் 123 பேருக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 95பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு 14, களுவாஞ்சிக்குடி 08, காத்தான்குடி18, ஓட்டமாவடி16, கோறளைப்பற்று மத்தி 10, செங்கடலடி 03, ஏறாவூர் 01, பட்டிப்பளை 07, வவுணதீவு10, வெல்லாவெளி 02, கிரான் 06 என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஆரையம்பதியில் மூன்று குடும்பங்களையும், மட்டக்களப்பு பயனியர்வீதியில் 20பேரையும் தனிமைப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## தொகுதி விகிதாசார...

(முன்பக்கத் தொடர்ச்சி)

அடைவதற்கான சாத்தியங்களும் இருக்கின்றது.

தொகுதியாகவும் விகிதாசார அடிப்படையிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்களாயின் நிச்சயமாக பாதிப்பு ஏற்படும். எனினும் வடக்கு கிழக்கில் தமிழ்த்தேசியம் சார்ந்த கட்சிகளுக்கு பெரிதாக பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றாலும்

சிறியளவில் பாதிப்பு இருக்கவே செய்யும். இருந்தாலும் தொகுதி விகிதாசார தேர்தல் முறைமையில் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர் தமிழ் மக்களுக்கும் நிச்சயமாக பாதிப்பு இருக்கிறது.

1977 ஆம் ஆண்டு தொகுதி ரீதியான தேர்தல் நடைபெற்றபோது நுவரெலியா மஸ்கெலியாத் தொகுதியைச் சேர்ந்த முன்னாள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் மறைந்த

சௌமியமூர்த்தி தொண்டமான் ஒட்டுமொத்த இலங்கை மலையகத் தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

1989 ஆம் ஆண்டு விகிதாசாரத் தேர்தல் முறை வந்ததுக்குப் பின்பு இன்று கிட்டத்தட்ட மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் உள்ளார்கள். அதே போன்று முஸ்லிம்களை பொறுத்தமட்டிலும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த இரண்டு சாராருக்கும் நிச்சயமாக பெரிய பாதிப்பு இருக்கின்றது.

## உலகக் கிண்ண...

(முன்பக்கத் தொடர்ச்சி)

நாட்டிற்கு செல்லவிருக்கிறார்.

இவர் கடந்த மூன்று வருடங்களாக கொழும்பில் பொலிஸ் உதைபந்தாட்ட விளையாட்டு அணிக்காக விளையாடி வந்துள்ளார்.

இந்த வருடம் இலங்கை இராணுவ அணியில் இணைந்து விளையாடிக் கொண்டு வருகிறார்

இவர் இலங்கை உதைபந்தாட்ட அணியில் தெரிவு செய்யப்பட்ட 22 பேரில் இவரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

இவரையும் இவரை பயிற்றுவித்த ஆசிரியர்களையும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரள மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான்- மகரூப் , மற்றும் எம்.எஸ். தௌபீக், ஆகியோரும்

மற்றும் கிண்ணியா அக்ஸேரியன் சுப்பர் லீக் நிருவாகம், கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளனம், மற்றும் உயர் அதிகாரிகள் பிரதேச மக்களும் தமது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

## கிழக்கிற்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தன அறிவித்துள்ளார்.

அதன்படி கிழக்கு வடமத்திய ஊவா மற்றும் மத்திய மாகாணத்திற்கு தலா 75ஆயிரம் தடுப்பூசிகளும் தெற்கு வடமேற்கு மற்றும் சபரகமுவ மாகாணத்திற்கு தலா 50ஆயிரம் தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் அம்பாறை ப்பிராந்தியங்களுக்கு இந்த 75ஆயிரம் தடுப்பூசிகளும் தலா 25ஆயிரம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பாதிப்பு குறைவாக உள்ள கல்முனைப் பிராந்தியத்திற்கு அடுத்தகட்ட வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படவிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் நாளை செவ்வாய்க்கிழமை(8) முதல் சைனோபார்ம் கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்:

குறித்த 75ஆயிரம் கொரோன தடுப்பூசிகள் எமக்கு கிடைக்கின்றன. செவ்வாயன்று தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. .

கிழக்கில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளாக திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பிரதேசங்கள் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் கல்முனைப்பிராந்தியம் குறைந்த பாதிப்பை எதிர்கொண்டுள்ளது தெரிந்ததே.

எனவே முதலில் பாதிக்கப்பட்ட முதல் 3 பிரதேசங்களுக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் அடுத்தகட்டமாக கல்முனைப்பிராந்தியத்திற்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்று தொகுதியினராக வகைப்படுத்தி இத் தடுப்பூசியினை வழங்குவதற்கு திட்டங்களை வகுத்துள்ளோம். இம்மாகாணத்தில் உள்ள தொற்றா நோயாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

அத்தோடு அரச ஊழியர்கள். கர்ப்பிணிகள் முன்னணி செயற்பாட்டாளர்கள் போன்றோருக்கும் இத்தடுப்பூசியினை வழங்க உத்தேசித்துள்ளோம்.என்றார்.




## திருமலையில்....

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மணித்தியாலத்திற்குள் 07 மரணங்கள் பதிவான நிலையில் குறிஞ்சாங்கேணி பகுதியில் ஐவரும், கிண்ணியா மற்றும் திருகோணமலை பகுதிகளில் தலா இருவரும் உயிரிழந்துள்ளதாகவும் 52 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் நேற்று (06) காலை 10.00 மணியளவில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 29 ஆண்களும் 23 பெண்களும் கோவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் இன்று வரைக்கும் 104 பேர் மரணித்து உள்ள நிலையில் 3616 பேர் மொத்தமாக தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை 191 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 95 கர்ப்பிணி பெண்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பு....

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலும் பார்க்க முதலமைச்சர் பதவியை வைத்துக் கொண்டு அதிகளவு அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் என நினைக்கின்றீர்களா? என நாம் அவரிடம் வினவியபோதே பின்வரும் கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

கேள்வி : நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலும் பார்க்க முதலமைச்சர் பதவியை வைத்துக் கொண்டு அதிகளவு அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் என நினைக்கின்றீர்களா?

பதில் : அவ்வாறு கூறமுடியாது. நான் முதலமைச்சராக இருந்த சூழல் வேறு, அப்போது இலங்கையில் யுத்தம் முடிவுறுத்தப்படவில்லை, வடமாகாணத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொணடிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரோடு இருந்தார். அப்போதைய நிலைப்பாடானது மாகாணசபை முறைமையானது தமிழ் மக்களுக்குப்போதும் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். அனால் மாகாணசபைத் தேர்தலை நடாத்தி கிழக்கில் ஒரு தமிழ் முதலமைச்சரைக் கொண்டுவர வேண்டும், தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் அப்போது செயற்பட்டது.

அப்போது அரசாங்கமும், வெளிநாடுகளும் அதிகளவான நிதியை மாகாணசபைகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்தன. அதனை நானும் என்னால் முடிந்தவரையில் பயன்படுத்தினேன் என்பது உண்மை. போராட்டம் முடிவுற்ற பின்னர் ஏற்பட்ட மாகாணசபைத் தேர்தல், வடமாகாணத்தில் முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன், விட்ட பிழைகள் எல்லாம் மாகாணசபை முறைமையை சரியா பிழையா என்பது தொடர்பில் மக்கள் சிந்திக்கும் நிலமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

என்னைப் பொறுத்தவரைக்கும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு மாற்றப் பேரவைக்குக்கும் நாம் கூறியது மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாகாணசபை முறையைக் கொண்டு வரவேண்டுமாக இருந்தால் குறிப்பிட்ட வருமானத்தில் அதிகளவு நிதி ஒதுக்கீடுகளை மாகாணசபைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கொண்டு வரவேண்டும். அவ்வாறு வந்தால் மாவட்டத்தில் வருகின்ற உள்ளூர் உற்பத்திகளையும் வைத்து அதிகளவான அபிவிருத்திகளை ஏற்படுத்த முடியும் என நம்புகின்றேன். அது ஒரு அரசியல் ரீதியான பிரச்சனை.

தற்போதைய சூழலில் ஒரு எம். பி ஆக இருந்து கொண்டு எதனைச் செய்கின்றீர்கள் என்ற கேள்வி எழுகின்றது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கொவிட் -19 அனைத்தையும் தடுத்தி நிறுதிக் கொண்டிருக்கின்றது. நான் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் எனக்கு அரசாங்கத்திடமிருந்து சொல்லப்பட்டது, எமது மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும், முதற்தடவையாக 5 வில்லியன் நிதி ஒதுக்கீடு செய்வதாக பேச்சளவில் ஒப்புக்கொண்டதாக இருக்கின்றது. கொவிட் விடுதலைாகி வருகின்ற போது அடுத்த வருடங்களில் அந்த நிதி மாட்டத்திற்குக் கிடைத்தால், அதிக அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியும். எனினும் தற்போதைய நிலையிலும் நாங்கள் பணிகளை ஆற்றிவருகின்றோம் என்றார்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



உதயகுமார் கல்வி நிலையம்




முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை. SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி



SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட அமைச்சர் அலி சப்ரி நேரடி விஜயம்






சீரற்ற வானிலை காரணமாக வெள்ளத்தால் இடம்பெயர்ந்த கொலண்ணாவ மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளை நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று (06) பார்வையிட்டார்.

அமைச்சர் அதே வேளை கொலண்ணாவ ரஜ மகா விஹாரையையும் பார்வையிட்டதுடன், கொலண்ணாவ ரஜ மகா விஹாரய இடம்பெயர்ந்த மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்க வேண்டும் என்பது குறித்து கலந்தாலாசிக்க கொலண்ணாவ தம்மிகா தீரோ, மகா சங்கம் மற்றும் உள்ளூர் அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வெல்லம்பிட்டி அறிவியல் மேம்பாட்டுக் கல்லூரியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்ற அமைச்சர், அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்து விசாரித்தார்.

பின்னர் அமைச்சர் வெல்லம்பிட்டியில் உள்ள கால்வான ரஜமஹா விகாரஸ்தனாயாவில் உள்ள இடம்பெயர்ந்த மையத்தை பார்வையிட்டு வெல்லம்பிட்டி மற்றும் கொலன்னாவ பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் குறித்தும் விசாரித்தார்.

மேலும், அமைச்சர் கொலன்னாவ ஜு/ம்ஆ பள்ளிவாசலையும் பார்வையிட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் தேவைகள் குறித்து விசாரித்தார்.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்குவது குறித்தும், வெள்ளம் குறைந்தவுடன், வெள்ளம் சூழ்ந்த வீடுகள் உள்ளிட்ட பொது இடங்களை எவ்வாறு சுத்தம் செய்வது மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு முகங்கொடுக்கும் பேரழிவுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பன குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த பகுதிகள் வருடம்தோறும் பல முறை வெள்ளத்தை எதிர்கொள்வதால், நீண்ட கால தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை பெற்றோலிய வளங்கல் நிறுவனத்தின் தலைவர் முஹம்மட் உவைஸ், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை தவிசாளர் ரங்கஜீவா ஜெயசிங்க, துணைத் தலைவர் இந்துனில் ஜகத் குமார, எதிர்க்கட்சித் தலைவர் சாலியா விக்ரமசிங்க, சபையின் முன்னாள் உறுப்பினர் மற்றும் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபர் வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்தவேளை வீதியில் மிகவும் கஸ்டத்திற்குமத்தியில் விறகுசுமந்துவந்த தொழிலாளியொருவருக்கு உலர்உணவு நிவாரணப்பொதியை வழங்கிவைப்பதைக்காணலாம். கூடவே திருக்கோவில் பிரதேசெயலாளர் த.கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் நிற்பதையும் காணலாம். (படம்: வி.ரி.சகாதேவராஜா)

# வாகரையில் ஐந்தாவது கொரோனா சிகிச்சை நிலையம் திறப்பு!



(ந.குகதர்சன்)

கொரோனா தொற்றினை கருத்தில் கொண்டு அரசின் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 1000 கட்டில் தயார்ப்படுத்தும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா நோயாளிகளுக்காக கொரோனா சிகிச்சை பிரிவு வாகரை மாவட்ட வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

இடை நிலை வைத்திய நிலையம் என அழைக்கப்படும் தரம் -111 இற்கான திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபிக், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், மாவட்டத்தில் கடமையாற்றும் சுகாதார வைத்தியர்கள், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாவது கொரோனா சிகிச்சை நிலையமாக நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை, காத்தான்குடி, கல்லாறு மற்றும் கரடியனாறு ஆகிய வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சை விடுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

# காணாமல் போன 03 மீனவர்களின் தாய்மார் அமைச்சருக்கு மனு!

(வடமலை ராஜ்குமார்)

திருகோணமலை திருக்கடலூர் ரில் இருந்து கடற்றொழிலுக்கான சென்ற 03 பேர் 13 தினங்களை கடந்த நிலையில் கரை திரும்பாமல் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களை தேடிக் கண்டுபிடித்து தருமாறு கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு காணாமல் போன மீனவர்களின் தாயார் உருக்கமாக மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் திருக்கடலூர் எனும் கடற்றொழிலாளர் கிராமத்தில் கடற்றொழிலை ஜீவனோபாயமாக நம்பி பல குடும்பங்கள் காலம் காலமாக வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலையில் கடந்த 23.05.2021 அன்று 01.00 மணிக்கு சிறிய படகு மூலம் தொழிலுக்குச் சென்ற எமது பிள்ளைகள் இன்று வரை கரை திரும்பாது காணாமல் போயுள்ளனர்.

அவர்களின் விபரம் பின்வருமாறு ஜீவரெட்ணம் சரண்ராஜ் (34 வயது) விஜேந்திரன் சஞ்ஜீவன் ( 21 வயது) சிவசுப்பிரமணியம் நதுஜன் ( 21 வயது)

இதனை அறிந்து நாம் அங்கம் வகிக்கும் விபுலானந்தா கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் முயற்சியால் சிறிய படகுகள் மூலமாகவும் பெரிய தாங்கி படகுகள் மூலமாகவும் காணமல் போன நாள் முதல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். மேலும் கடற்படையினரும் தமது பணியை செய்து தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் சாதகமான பலன் எதுவும் எட்டப்படாமல் எமது குடும்பமும் எமது கடற்றொழிலாளர் சமூகமும் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. கடந்த கால யுத்த சூழ்நிலையில் சொல்லெண்ணா துயரங்களை அனுபவித்து எமது பிள்ளைகளை இழந்து தற்போது சிறிது காலம் நிம்மதியாக வாழ்ந்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் எமது பிள்ளைகள் காணாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 29.05.2021 சென்னைக்கும் இலங்கை கடலுக்கு இடையே உள்ள எல்லையில் படகினைக் கண்டதாகவும் படகில் யாரும் இருக்கவில்லை என்றும் நீர்கொழும்பைச் சேரந்தவர்கள் பெரிய படகில் மீன்பிடிக்க சென்ற போது கண்டதாக தேடிச்சென்ற கடற்றொழிலாளர்களிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மறுநாள் பிள்ளைகள் மூவரும் தமிழகத்தின் கன்னியாகுமரியில் இருப்பதாக ஒரு தகவல் கிடைத்தது. எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

எனவே கௌரவ அமைச்சர் அவர்களே! எமது பிள்ளைகள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ளார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இந்த நம்பிக்கைக்கு சாதகமாக தங்களது கடற்றொழில் நீரியல் வள அமைச்சு மூலம் இலங்கை தூதரகம் மற்றும் இந்திய தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்ச்சியான தொடர்புகளை பேணி எமது பிள்ளைகளை மீட்டுத்தறுமாறு தங்களை பணிவுடன் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கின்றோம்.

# பயணத்தடை உள்ள நிலையிலும் மோட்டார் சைக்கிள் விபத்து

## ஆலையடிவேம்பில் சம்பவம்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோளாவில் பிரதேத்தில் சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்ற விபத்தில் 65 வயதுடைய ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் அக்கரைப்பற்று 9ஆம் பிரிவை சேர்ந்த மீனவர் சங்க தலைவர் எனவும் இவர் அனுமதி பெற்று மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் மீன் பெட்டியுடன் பயணித்த அவர் வீதியை கடக்க முற்பட்டதாகவும் இச்சந்தர்ப்பத்தில் எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதி



விபத்து நடைபெற்றதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் சம்பவ இடத்திற்கு சென்ற போக்குவரத்து பொலிசார் சம்பவம் தொடர்பில் நேரில் கண்டவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டதுடன் ஆராய்ந்தும் வருகின்றனர்.

விபத்தில் காயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் விபத்தை ஏற்படுத்தியதாக கருதப்படும் மோட்டார் சைக்கிளும் பொலிசாரால் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பயணத்தடை அமுலில் உள்ள நேரம் இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவினால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவு



**(பாறுக் ஷிஹான்)**

கொரோனா அச்சுறுத்தலினால் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு உலருணவு வழங்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பல்வேறு அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு இஸ்லாமபாத் கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வறிய மக்களுக்கு உலருணவு பொருட்கள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்லவராசா கஜேந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது .

இவ்வுலருணவு பொருட்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இளைஞர் தலைவர் துசானந்தன் தலைமையிலான குழுவினர் வீடு வீடாக சென்று விநியொகித்து வருகின்றனர்.

குறித்த உலருணவு பொருட்களில் அரிசி சீனி தேயிலை பால் மா உள்ளிட்ட பொருட்கள் உள்ளடங்குவதுடன் சுமார் இதுவரை 200க்கும் அதிகமான தமிழ் பேசும் குடும்பங்களுக்கு இப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வை.எம்.எம்.ஏ பேரவையின் ஏற்பாட்டில் கல்முனையில் மாபெரும் இரத்தான முகாம்



**(எம்.என்.எம்.அப்ராஸ், எஸ்.அஷ்ரப்கான்)**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் ஏற்பாட்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்ட குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக" உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளிலான மாபெரும் இரத்ததான முகாம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் சனிக்கிழமை இடம்பெற்றது .

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் போதைப் பொருள் தடுப்பு பிரிவு திட்டத்தவிசாளர் எஸ்.தஸ்தக்கீர் நெறிப் படுத்தலில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப்பணிப்பாளர் கே.எல்.சுபைரின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்ற இம்முகாமில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத்தலைவர் சஹிட் எம். ரிஸ்மி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு முதலாவது இரத்தம் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 16 வை.எம்.எம்.ஏ.கிளைகளின் பதவி வழி உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு இரத்தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்ச்சகர் ஏ.எல்.எப்.ரகுமான் அவர்களின் வழிகாட்டலில், இரத்த வங்கியில் கடமையாற்றும் வைத்தியர்கள்,தாதி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இரத்தான முகாமை நடாத்தினர்.

கொவிட் 19 நிலைமையைக் கவனத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமாக பின்பற்றப்பட்டு குறித்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

பேரவையின் தேசியத் தலைவர் ஸஹீட் எம்.றிஸ்மி, இங்கு கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கிய அம்பாறை மாவட்ட பேரவை கிளை அங்கத்தவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தார்.

# சௌபாக்கியா விசேட வீடமைப்பு கையளிப்பு



**(ந.குகதர்சன்)**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்கியா விசேட விடமைப்புத் திட்டத்தின் கீழ் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி சௌபாக்கிய விசேட வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஸீஸ், சமுர்த்தி சமுக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சாஜகான், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எம்.என்.சியாத், எம்.சர்ஜின், கிராம சேவை அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆறு இலட்சம் ரூபாய் நிதி உதவியும், பயனாளியின் எட்டு இலட்சம் ரூபாய் பங்களிப்பு மூலம் நிர்மானிக்கப்பட்ட வீட்டினை பயனாளியின் பாவனைக்கு கையளிக்கப்பட்டதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா தெரிவித்தார்.

இதன்போது பயனாளியின் வீட்டின் வளாகத்தில் பயன் தரும் மரக் கன்று நாட்டி வைக்கப்பட்டது.







# ஏறாவூர் நகரில் ஏறாவூர்- 2 கிராமசேவகர் பிரிவு முடக்கம்

**(நாஸர்)**

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதையடுத்து ஊரின் ஒரு பகுதியை தனிமைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் நகர் பிரதேசத்திற்கான கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் அவசர கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டம் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அலுவகத்தில் நடைபெற்றது.

வைத்தியதிகாரி சாபிறா வசீம், பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜ/த், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த, கொரோனா கட்டுப்பாட்டு கிழக்கு மாகாண செயலணியின் பிரதிநிதி இராணுவ அதிகாரி அனஸ் அஹமட் , சமூக , சமய துறைசார் அதிகாரிகள் முக்கியஸ்தர்கள பலரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

பிரதானவீதி தொடக்கம் நூறுஸ்ஸலாம் பள்ளிவாயல் வீதி அஸ்ஹர் பாடசாலை வீதி மற்றும் ஓடாவியார் வீதி ஆகிய பாதைகளுக்கிடைப்பட்ட ஏறாவூர்- 2 என்ற கிராம சேவை அதிகாரி பகுதியை தனிமைப்படுத்தப்படுத்துவதற்கு சுகாதாரத் துறையினரால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் 605 குடும்பங்களைச்சேர்ந்த 2420 பேர் வாழ்கின்றனர். குறிப்பாக ஏறாவூரில் இதுவரை 234 கொரோனா தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

கொரோனா மூன்றாம் அலையில் மாத்திரம் 134 தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.